223567

# திக்குவிஜயம்

V213
N13
223567

நெ. 1 17-1-1913.

* விடையெமக்கு வேண்டும்.

# திக்கு விஜயம்.

இஃது
நற்சீடர்களின் வேண்டுகோளுக்கிணங்கி
பூர்வசித்தேரி
ஸ்ரீ சேரர்கோன் மடாலயம்
அக்கிரசன்மன்

## ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள்

எழுதி
ஷை சுவாமிகளது குமாரர்

## யுவராஜ கோபாலன்

என்றழைக்கப்படும்
8-வது.

ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகளால்

இராயவேலூர்:
சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்தில் அச்சிட்டு
பரிதாபி௵ ஆவணி௴ 1௳
[சுத்தப்பதிப்பு ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.]

பேர்பெற்ற விலை ஐந்து ரூ அம் பம். பைம்

பஞ்சபூதியம் திருஷ்டாந்தம்

யார் கிதானம்.

அவர்கள் பார்வைக்கு.

223567

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திக்குவிஜயம்.

இஃது

நற்சீடர்களின் வேண்டுகோளுக்கிணங்கி

சித்தேரி

ஸ்ரீ சேரமான் பெருமாணயனர் மடம்

அக்கிரசன்மன்

* 65-வது

ஸ்ரீமத் சே. மு. மாணிக்கவாசக சுவாமிகளால்

எழுதி

இராயவேலூர்

சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

1912

---

* அருபத்தைந்தாவது

ஸ்ரீமத் சே. மு. மாணிக்கவாசக சுவாமிகள் விஜயம்.

இஃது { பூர்வ தக்ஷண பக்ஷ்ம உத்தர திக்குவிஜயமாகும். ஆனல்,
நற் சீடர்களின் வேண்டுகோளுக்கிணங்கிசித்து+ஏரி,

சித்தேரி. அதிலும் சின்னசித்தேரி ஸ்ரீசேரமான் பெருமாணாயனார் மடம், அக்கிரசன்மன் அருபத்தைந்தாவது ஸ்ரீமத் ———— சுவாமிகள் (அஷ்டாக்ஷரத்தாலமைந்தது) இவ்வெட்டெழுத்துக்களில் முதல் மூன்றை முன்னால் நிறுத்தி கடைஐந்தை பின்னால் நிறுத்தி தந்தை தாயார்களுக்கு மத்தியில் மாணிக்க வர்மனாகவும், தன்மீது அன்புடையவர்களுக்கெல்லாம் பிள்ளையாகவும், பள்ளிக்கூடத்தில் கூடிவாசித்த தோழர்களுக்கெல்லாம் வாசகராகவும்; தனது நாயகிக்கு நாயகராகவும், சேனாதிபதிபட்டத்திற்கு ஸ்ரீலஸ்ரீ சே.மு. மாணிக்கவாசகநாயகவர்மனாகவும், குருத்துரோகிகளுக்கு கண்டக்கோடாலியாகவும், குலத்துரோகிகளுக்கு தரு தலையாகவும், அன்னியர்களுக்கு பிரம்மபின் வன்னி முன்னுள்ள விசுவா மித்திரனாகவும், நற் சீடர்களுக்கு அக்கிரசன்மனா (குருவா) கவும், அமைந்துள்ளவரால் நிர்மாணிக்கப்படும் மடத்திற்கு உத்தர திக்கில் நமது "இராயன்" தமது வம்ச தாதைகளிலொருவனுக்கு நடைதூதனாக விருந்தவனை பணியக்கூடிய கன்னடதேசத்து மாத்துவ பார்ப்பானாகிய அப்பாஜியை மந்திரியாகவைத்துக்கொண்டு அரசாக்ஷி செலுத்திவந்த காலத்தில் தனது பந்துவாகிய வல்லாள இராயன் திருவருணையம்பதியை சுதனாகப்பெற்று "ஓம்ஜலகண்டேஸ்வரா" உமக்கு எமது பந்துவாகிய வேலூர் இராயன் தமக்குரிய நான்கு திக்குகளிலும், மலையரண்களால் சுற்றிலுமமைந்த காட்டரண்களும், நீரரண்களும், நிலையரண்களும், சூழப்பெற்று சதாகாலம் மாறாது இரவு பகலாக அரசாக்ஷி நடத்தப்படும் இராயவேலூர் கோட்டைக்குள் கட்டப்பட்டிருக்கும், ஆலயத்தில் தீபமெரியாது என்று சொல்ல மிக்கவிசனிக்கின்றேன். என்ற தந்தையை நோக்கி இதற்குபின் வெகுகாலங் கழிந்தமேல் சேரமண்டலத்தின் மஹாமடாலயத்திலிருந்து சேனாதிபதி ஒருவர் நான்குதிக்கும் விஜயம் பெற்றுக்கொண்டு முக்திக்குரிய மார்க்கங்களையுணர்ந்து எமதருளால் பரதேசி கோலத்துடன் இங்கு வந்தமர்ந்து, அக்கோட்டையைக்கைப்பற்றி தெய்வபக்திநிறைந்து தன்னுயிரைப்போல் மன்னுயிர்களை காப்பாற்றிக்கொண்டு மற்றொருவருக்கும் கீழ்படியாதுல காண்டு வரும் *"மஹா மண்டலேஸ்வரர்" ஆகிய ஐந்தாவது ஜ்யார்ஜ்மஹாராஜசக்ரவர்த்தி அவர்களுடைய திவ்விய சமுகத்திற்கு விண்ணப்ப மூலமாய் கேட்டுக்கொள்வார் அதை அங்கீகரித்தல் அரசன் கடமை. ஆனால் சும்மாயிரார் துரைநகரத்தில், சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. கி. பி. 1912ஆம் அக்டோபர்மீ 1உ

---

* நமது ஐந்தாவது ஜ்யார்ஜ் மஹாராஜா சக்ரவர்த்தி அவர்களின் பட்டப்பெயர்களுக்கு முன்னால் மஹாமண்டலேஸ்வரர் என்னும் காரணப்பெயர் ஒன்றை சேர்த்து சர்வபிரஜைகளும் வழங்கி வரவேணுமாய்க் கோரப்படும், பரதேசி. அதாவது எப்படி யெனில்:—மஹாமண்டலேஸ்வரர் அண்டு ஐந்தாவது ஜ்யார்ஜ் மஹாராஜா சக்ரவர்த்தி.

## முகவுரை.

திருவிளையாடல் தேவாரம் கல்லாடம் புறநானூறு முதலிய ஞான நூற்களிற் சிறப்பித்துள்ளவரும், கல்லாடர் கபிலர் பாணர் முதலிய வரப்பிரசாதகர்கள் காலத்திலிருந்தவரும், திருவஞ்சைக்களம் கொடுங்கோளூர் கேரளம் மலையாளம் அனந்தசயனம் திருவாங்கூர் கொச்சி பாவநாசம் சேரலம் சேலம் என்று பலநாமங்களாய் வழங்கிவரும், திருநகரத்திற்கு கடைச்சங்கத்திறுதி காலத்தில் (சுமார் ஆயிரத்தெண்ணூறு வருடங்களுக்கு முன்) அரசாக்ஷி செலுத்திவந்த செங்கோற்பொறைசேர மஹாராஜ சக்கரவர்த்திக்கி சுதனாகவுதித்து, பெருமாக்கோதையர் கழறிற்றறிவார் ஸ்ரீசேரமான் பெருமாணாயனார் என்று திருநாமம்பெற்றுள்ளவரும், ஸ்தல யாத்திரையில் வழுதிவரகுணபாண்டியன், சோழன் முதலானவர்களுடன் பிரியா நேசம்வகித்தவரும், மன்னர்களுக்கு மன்னராகிய முடியுடைய வேந்தர்களில் முதல்வராக நின்று அரசாட்சி செலுத்திவந்தவரும், *ஸ்ரீசுந்திரரின் தோழரும், கைலயங்கிரி அண்ணலைக்காண †வெண்பரிமீது சென்றவரும், பொன்வண்ணத்தந்தாதி மும்மணிக்கோவை ‡ ஆதியுலா முதலிய கிரந்தகர்த்தரும், "குதிரையுங்காதங்கிழவியுங்காதம் போங்காண் குலமன்னவனே" என்று ஔவையார்சொல்லப்பெற்றவரும், கணங்களுத்தலைவரும், அருபத்து மூவரிலொருவரும், "சேரமான் மாவெண்கோ"வென்று வழங்கும் நாயனாரின் திருமடத்திற்கு அக்கிரசன்மனாக வமர்ந்திருக்கும் சுவாமிகள் சன்னிதானஞ் சேர்ந்து அஷ்டாங்க பஞ்சாங்க வந்தனங்களைச்செய்து வாய்பொத்தி கைகட்டி நின்று ஹேகுரவா! எங்கட்கு இதன் முன்னால் விவரித்த சுவாமிகளின் சரிதையைக்கேட்டுத் தெளிந்தோம். ஆயினும், தங்கள் திருவாக்கினாலேயே ஷை சுவாமிகளின் விஜயத்தையுங் கேட்க ஆனந்தங்கொண்டவர்களா யிங்குவந்தடைந்தோம். தாங்கள் கிருபைபுரிய வேண்டுமென கேட்டுக்கொண்டதற்கு அந்நற்சீடர்களின் மனம் சந்தோஷிக்கவேண்டி ஷை 'சுவாமிகள் பூர்வ தக்ஷண பக்ஷிம உத்தர திக்குகளில் விஜயஞ்செய்ததையும்; அந்தந்த திக்குகளில் நடந்த முக்கிய விஷயங்களையும், ஒருவாராகமொழிந்த வாசகத்திற்கே "திக்கு விஜயம்" என்று நாமஞ்சூட்டி வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதிலேதாவது பிழைகளிருந்தெதிற்படினும், அதைச் சன்மார்க்கர்கள்விடுத்து முக்கிய அம்ஸங்களை மாத்திரம் கவனிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளும் பரதேசி.

---

* நண்பனிருந்து வளஞ்செய்யு நதிவாசஞ்செய் நகரிதுவோ
பண்பினவன்போல் விளங்கும்பதியோ விதுவென்றக மகிழ்ந்து
வெண்பைங்கதிரோ முடிசூடும் விமலர் கோயிலுட் புகுந்து
வண்பவளச் செவ்வாய் மலர்ந்து பதிகம்பாடி வணங்கினர். (89)

வேதமுறை யிட்டறியாதவிமலர் கோயில்சூழ் நதியை
யாநிநதி யென்பதுமறிந்தார் பஞ்சாக்கர கீரானதுவு
நீதியனந்தன் செய்வாவி நீருந்தலத்தின் மகிமையுங்கண்
டிதுபுவிக்கோர் கைலாய மிதுபோலில்லை தலமென்றார். (90)

சேர்ராணை செலுத்துகின்றதிறத்தின் முதன்மைசிறந்துள்ளோர்
சீரினுதியர்கோன் வந்தாடக்குஞ் சிறப்பெல்லாஞ் செய்தார்
காரின்விளங்கு மலர்சோலைக் கிள்ளைவனம் வாழ்கண்ணுதலை
யீரமனத்தால் வணங்கியே விடைகொண்டப்பா லேகினரால்.(91)

† மனத்தின்வேகக் கொய்சுவல்வார் மாவிலேற வைர்தெழுத்தை
நினைத்துக்காதி லோதவுமே நிகரில்வெள்ளை யானைமுன்னே
யனைத்துமுணர்ந்த சுந்தரனா ரன்பவருக வென்றருள
வினைத்துன்பம் வீழ்த்தேகுகின்றான் கைலைக்கிரிக்கே வில்லவனும்

‡ ஆதியுலாவை யரங்கேற்றி யருளைப்பெற்றே விளங்குகண
நாதராகிச் சிவபோகங்கண்ணி யுலாவைத் திருப்பிடவூ
ரோதுசாத்தனார்க் குதவி யுலகத்திதனை விளக்குமெனக்
கோதையார் தம்பெருமானு மகிழ்ந்தா னுள்ளங்குளிரவே. (113)

(மேற்குறித்திருக்கும் பாக்கள் சேலம் ஸ்தலபுராணத்துள்ளது.)

---

## கவனிப்பு.

சேலம் வன்னிகுல க்ஷத்ரிய கழறிற்றறிவாரென்னும் ஸ்ரீ சேரமான் பெருமாணையனார் சபையை முதல்முதல் சேலத்தில் ஸ்தாபித்தவரின்னாரென்றும், அச்சபையை ஸ்தாபிப்பதற்குமுன் அர்நியஜாதியாரால் சேர்ந்த விபத்துகளையெல்லாம் வெட்டித்தள்ளி விஜயங்கொண்டவரின்னாரென்றும் இதன் முன்னால் வரும் ரிகார்டுகளினால் சகலரும் தெரிந்துக்கொள்ளக்கூடியதாயிருக்கின்றது. ஆனால் அச்சமயத்தில் குலாபிமானம் கிஞ்சிற்றுவதுவைத்து முன்வந்து நிற்காதவர் இனி சபைக்குறிய பொக்கிஷ காரியதரிசியின் அலுவலை அதி ஆவலுடன் பார்த்துவருவாரென்று முன்னாடி தெரிவிக்கப்படுகின்றது,

---



அழகும் வாக்குவல்லபமும் பன்னூலுணர்ச்சியும் வேதாப்பியாசமும் உண்டாகுமென்று கூறப்பட்டது.

இராஜ்யாதிபதி குருகேந்திரத்திலிருப்ப பாக்கியாதிபன் இரண்டிலிருப்பதினால் ஜாதகர் ராஜசேவை செய்தல் வேண்டுமென்பது சோதிடசாஸ்திர சித்தாந்தம். ஆயினும், ஷை குரு ஆதிபத்ய தோஷமுயிருத்தலின் பூரண பலனற்றவனாதலின் அவ்வித அரசுநிலைமையில்லாவிடினும் பலர்வணங்குஞ் சிறப்பமைந்து நாற்றிசையும் புகழ ஜெயம்பெற்று வாழ்வன். இதற்கு குஜன்மேடத்திலிருப்பதே போதியசான்றாம்.

குருதிசை பிரபலயோகதிசையெனவும் இதைவிட சனிதிசையும் மிக சிலாக்கியமான சுபபலனை அளிக்கக்கூடிய திசையெனவும் பலஆதாரங்கள் இருத்தலினால் இவ்விருதிசையிலும் ஜாதகருக்கு மஹாசிரேஷ்டமான நற்பலன்களும் காரியசித்தியாம் இஷ்டார்த்த சித்தியும் ஸ்ரீமடம் கல்வஅபிவிருத்தியை அடைதலும் பலரும்போற்ற பரிசுபெறலு முண்டாகுமென்பது திண்ணம்.

### சகோதர பாவம்.

மூன்றாக்குடையவனாகிய சுக்கிரன் ஆட்சியாயிருப்பதினால் ஜாதகருக்கு அனேகம் சகோதரம் உதித்திருந்து காலாவர்த்தியில் அவைக்ஷீணித்துப் போமெனவும், தமது கௌமாரபருவத்தில் இரண்டுவரை நிலைத்து பின் தனது அந்தியகாலம் விருத்தாவஸ்தையில் ஒன்றேனும் நிலைபடாது கஷ்டம்பெருமென்பது துணிபு.

மேற்கோள் கவி. "துலக்கமாய் வெள்ளி மூன்றில் தோன்றியே
யொருவர்பாராக், கலக்கமில்லாமனின்றால் கருவற்று மனையும் பாழாம்"

என்பது கொண்டும் சகோதரநாசமும் ஒற்றுமைக்குறைவும் பிதுர் பாக்கியயீனமும் உண்டாகுமென்று சொல்லப்பட்டது.

### புத்திர பாவம்.

புத்திர ஸ்தானாதிபன் சனிசகிதமாய் சூரியனுடைய சாரம் ஏறியிருப்பதினாலே ஜாதகருக்கு சந்தானதோஷமுண்டென்றும், குரு ஷை சனி சந்திரர்களைப் பார்ப்பதினால் சந்தானமுதித்து கஷ்டமடையுமென்றும், குருகேந்திரத்தில் நின்று ஸ்தானாதிபதியை பார்த்த விசேஷத்தினால் தீர்க்காயுளையும் குலாதிக்கத்தில் மேம்பாடும் கல்விச்சிறப்புமுடைய ஏக புத்திரனை ராகுதிசையில் சனிபுக்தியில் அடைவரென்றும், அக்குருவுக்கு கர்மாதிபத்யமும் வக்ரமைபற்றியே கீர்த்திமேம்பாடுகளில் சிறந்தவனான ஷைபுத்திரனே அந்திய கர்மத்திற்கு உரியவனாக ஷை திசை ஷைபுக்தியில் ரிஷபகன்னிமகரம்இவற்றிலொன்று ஜனன,சந்திர,லக்கினமாயிருப்ப நற்சிரகயோக வலிதுடன் பெற்று மகிழ்வடைவன் என்பதாம்.

புத்திரஸ்தானாதிபன் 11-ல் சனிசம்பந்தமாயிருப்பதினாலும், புத்திர ஸ்தானத்தை சனிபார்ப்பதினாலும், புத்திரவிருத்தியும் புத்திரனால் குல அபிவிருத்தியும், உண்டாகுமென்றும் அவ்விதபுத்திரபலனை 2. அல்லது மூன்றுக்குள்ளாகவே நிலைபெருமென்றும் ஏற்படுகின்றது.

## 4-ம் பாவமும் 9-ம் பாவமும்.

நாலுக்குடையபுதன் 2-ல் சூரிய அங்காரக ராகுசம்பந்தமாய் கேது வால் பார்க்கப்படுவதினாலும் சந்திரன் 11-ல் சனிசம்பந்தமுற்றிருப்பதினாலும் ஜாதகன் சுகபோகயின்பவிருத்தியுள்ளவனாய் எப்போதும் நல்ல சுகஸ்திதியிலேயேயிருந்து காலங்கழித்து வருவனென்றும், தாய்க்கு குடும்பஸ்தானத்திலிருக்கும் ராகுதிசையில் அங்காரகபுக்தியில் ஆயுள் முடியுமென்றும், தந்தை ஸ்தானாதிபன் 2-ல் பாபகதனாயிருப்பதினால் ஜாதகர் எவ்வனவயதில் ராகுதிசையில் குருபுக்தியில் தந்தைஆயுள் முடியுமென்றும், ஷை திசையிலேயே பிதருமாதுரு கஷ்டங்களும் குடும்பக்ஷீணமும் பாக்கியயீனமும் வெளிசஞ்சாரமும் நிகழுமென்பது துணிபு.

குருதிசாரம்பத்தில் வெளிதேச சஞ்சாரமும் கீர்த்திப்ரபலமும் திக்குவிஜயமும் பலர்களால் புகழ்சியும் சிலவிடங்களில் உபமடஸ்தாபிதமும் நடைபெறுமென்பது பிருஹஜ்ஜாதகம் சுகர்நாடி முதலியநூற்களிற் கூறப்படுகின்றன.

ஷை ராகுதிசை ஜாதகருக்கு முந்தியமாரகதிசை யானபடியால் ஷை திசையில் மாரகதோஷம் குருபார்வையால் நீங்கி குடும்பகஷ்டங்களும் கர்மசம்பவங்களும் நிகழுமென்பது துணிபு.

## களத்திரபாவம்.

ஏழாமிடம் குருபகவான் இருப்பதினாலும் சுக்கிரன் 8-ல் இருப்பதினாலும் களத்திரம் நற்குணம் பொருளமையுடையதாயும், கற்புடையதாயும் தன்வாழ்நாள்முற்றும் அன்யோன்ய விசுவாசமுள்ளதாயிருந்து தனக்கு 55-ம் ஆண்டின்பின் முன்னதாகவும் சுமங்கலியாக பதவியடையுமென்பது துணிபு.

களத்திரம்வரும் நிலைமையாவன:—ஏழாமாதிபன் புதன் 2-ல் கேதுசாரம்பெற்று பலயீனனாயிருப்ப சாராதிபன் அஷ்டமஸ்தானத்தில் நின்றமையால் தாரவர்க்கமும் க்ஷீணதிசையடைந்துள்ள சந்ததிதோஷமுடையதென்றும் 7-ல் குருவிருப்பதுடன் சாராதிபன் துலாத்தில் 5-வதாகவாம்சம் பெற்றமையால் மிதுனதுலாகும்பத்தில் ஜன்மலக்கினமும் மேஷம் சிங்கம் தனுசு இவற்றில் சந்திரலக்கினமுமாகவுள்ள உத்தமமனைவியை இச்சாதகன் ராகுதிசையில் குருபுக்தியில் மணம் புரிவன் என்றும் 7-ல் குரு இருப்பதினால் களத்திரம் குணவதி கற்புவதியென்றும் இருவரும்



## சேலம் டவுன் மே. கோர்ட்டாரவர்கள் உத்திரவு.

போலீசார் சேலம் டவுன் மே. கோர்ட்டாரவர்களுக்கு சேனாதிபதி அவர்களின் விண்ணப்பத்தையும், வாக்குமூலத்தையுஞ்சேர்த்து அறிக்கை செய்தவுடன் ஷை கோர்ட்டாரவர்கள் எதிரிக்கு உடனே சம்மனனுப்பி தருவித்து ஷை எதிரி வெளியிட்டிருக்கும் விளம்பரப்படிக்கி பிரசங்கஞ் செய்யக்கூடாது என்று முச்சலிக்கா வாங்கிக்கொண்டு, இது முதல் தடவையானதினால் மன்னிக்கப்பட்டிருக்கிறது போவென்றனுப்பிவிட்டு ஷையான் பிரசங்கஞ் செய்வதாக குறித்திருக்குமிடத்திற்கு போலீசாரைப் போய் அவ்விடத்தில் யாதொருகூட்டங்களும் கூடாதிருக்கும்படி தக்க பந்தோபஸ்து செய்யுங்களென்று ஆர்டர் செய்தபடிக்கே போலீஸ் சப் இனிஸ்பெக்ட்டர் அவர்கள் மற்றுமுள்ள சிப்பந்திகளுடன் அவ்விடம் போயிருந்து யாதொரு கூட்டமும், பிரசங்கமும், கலகமும் நடக்காமல் அன்றிரவு எட்டுமணிவரையில் பந்தோபஸ்து செய்திருக்கின்றனர்கள்.

அன்றி சேலம் டவுனிலும், ஷை தாலுக்காவிலும், ஓமலூர் டிவிஷனிலும், திருச்செங்கோடு தாலுக்கா சங்ககிரி டிவிஷனிலும் அநேக கிராமங்கள் சென்று அவ்விடமுள்ள வன்னியர்களில் குலாபிமானமும், குருபக்தியு முள்ளவர்களுக்கு புனருபநயனஞ் செய்துவைத்து தக்க ஆசாரங்களை அவர்களுக்கு போதித்துவிட்டு அவர்களால் சமர்பித்த பாதகாணிக்கை கப்பங்களை பெற்றுக்கொண்டு தென்னாற்காடு ஜில்லாவில் அநேக கிராமங்கட்கு விஜயஞ்செய்திருந்ததில் பள்ளிப்பட்டு கிராமத்திலுள்ள குலாபிமானி திருஆதிமூலராஜா அவர்கள் கேட்டுக்கொண்டபடி அதற்கடுத்த புலவனூர் கிராமத்தில் பெரியபிரபுவும் மிராசுபாத்தியமும் மாடிவீடுமுள்ள ஸ்ரீமான்குழந்தைவேல் வன்னியனார் அவர்கள் கிரஹத்தைச் சேர்ந்து அவரால்தக்க உபசாரணைசெய்யப் பெற்று தான்வந்திருக்கும் வரலாற்றை தெரிவித்தவுடன் ஷை பிரபு குலாபிமானஞ் சற்றும் வையாமல் ஷை யூரிலுள்ள பார்ப்பார்களில். ஐயங்கார் நால்வரும், ஸ்மார்த்தர்ஒருவரும், ஆக ஐந்துபேர்களை வரவழைத்து இவரிடம் தர்க்கிக்க விட்டு விட்டனராம்.

**பார்ப்பார்:** பூணூல் போட்டிருக்கிறாப்போலிருக்கிறதே?

**சேனாதிபதி:** ஆம்? ஆம்?

பா. என்ன வம்சம் நீர்.

சே. க்ஷத்ரிய வம்சம் நாம்.

பா. க்ஷத்ரியர்கள் உலகத்தி லில்லையே?

சே. ஏனில்லை சொல்வீர்.

பா. சூரியவம்சம் பரசுராமனால் நிர்மூல மாக்கப்பட்டிருக்கிறது சந்திர வம்சம் சாரங்கதானுடன் கால்வழி யற்றுப்போயிற்று, வேறு வம்சம் கிடையாது.

சே. வீண் விதவை ஸ்ரீகளைப் போலுனராது சுருதியாதாரங்களுடன் சொல்வீர்.

பா. இராமாயணத்தில் சொல்லிய பின்வரும் கவிகளை!

மூவெழு முறைமை பாரின் முடியுடை வேந்தை யெல்லா
மேவெழு மழுவின் வாயால் வேரறக் களைகட் டன்றோர்
ஆவெழு குருதி வெள்ளத் துறையிடை முறையி னெந்தைக்
காவென கடன்க ணோர்ந்தே னருஞ்சின மடங்கிப் போந்தேன்.
உலகெலா முனிவர்க் கீந்தேன் உறுபகை யொடுக்கிப் போந்தேன்
அலகில்மா தவங்கள் செய்த னருவரை யிருந்தே னுன்னடைச்
சிலையைநீ யிறுத்த வோசை செவியுறச் சீறி வந்தேன்
மலைகுவன் வல்லை யாகில் வாங்கிடுத் தனுவை யென்றான்.

சரிசரி ஞான மென்பதும்மிடத்தில் கிஞ்சிற்றேனுங் கிடையாது. ஆயினும், நாம் சொல்வதை கவனமாய்க் கேட்பீர். ஸ்ரீ கம்பராமாயணத்தில், பாலகாண்டம், பரசுராம படலத்தில் நீர்சொல்லியது 33, 34-வது கவிகள் நாம் சொல்வதோ 36, 39-வது கவிகள் தான்.

பூதலத் தரசையெல்லாம் பொன்று வித்தனையென்றாலும்
வேதவித்தாய மேலோன் மைந்தனீ விரதம்பூண்டாய்
ஆதலிற் கொல்லலாகா தப்பித்து பிழைப்பதென்றால்
யாதிதற் கிலக்கமாவ தியம்புதி விரைவினென்றான்.

எய்தவம் பிடைபழு தெய்திடா மலென்
செய்தவம் யாவையுஞ் சிதைக்க வேயென
கையவ னெகிழ்தலுங் கணையுஞ் சென்றவன்
மையறு தவமெலாம் வாரி மீண்டதே.

இதுவன்றி தமிழ்பாரதம், ஆதிபருவம், சந்தனுசருக்கத்தில் 142 143-வது கவியைக் கேளும்.

இவ்விராமனு மறுத்தமன்னவ னுமையிரண்டு தினமிகலுடன்
வெவ்விராவு மொழியாதுவெஞ்சமர் விளைத்தகாலை யடல்வீடுமன்
கைவிராயசிலையோடு மெய்வலிகவர்த்து முன்றளர்வு கண்டுபோ
ரவ்விராமனிகரொன்று மாறிவளையஞ்சி நின் றெதிரடர்க்கவே.
ஓடிமீன்மழுமேவு பாணிதனதார் புகுந்தன னுவந்துபல்
கோடிதோரசர் துதியெடுக்க வதிகுமாரனுந் தனகர்குறுகினு
ளுடிமாலையிட் வந்தாசிபதி நல்குமொல்கு மிடைநவ்வியும்
வாடிவாடியினி யமையுமென்று தவவனமடைந்த னன்மடங்கியே.

வைபாரதம், கன்னபர்வம், பதினேழாம் போர்சருக்கம் 120-வதுகவி.

வேதியற்கல்லது விளம்பொருவயன்
போதியற்கனை கினைக்களித்தபுன்மையா



(6) சௌளம்.

பிறந்த மூன்றாவருடத்தில் விதிப்படி கிரியைகளைமுடித்து சிகை வைத்து மிருதுவான ரோமங்களைக் களைந்து ஸ்நானஞ்செய்வித்து புது ஆடையாபரணாலங்கிருதஞ் செய்து கர்ணபூஷணஞ் செய்தனர்கள்.

(7) வித்தியாரம்பம்.

பிறந்த ஐந்தாம்வயதில் விதிப்படி கிரியைகளைமுடித்து ஓதி வைக்கக்கூடிய உபாத்தியாயர் (முதலாசிரியர்) ஸ்ரீமத்கந்தசுவாமிபிள்ளை அவர்களை உபசாரனைபோடு வரவழைத்து ஐயரே! உமது பாலன் நன்கு விளங்க கற்பிப்பது உமதுபாரம் எனவிண்ணப்பித்து "பள்ளியில்" அமர்த்தினார்கள். ஆசிரியரும் வஞ்சகமின்றி "ஹரி:ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை. ஹரி:ஓம் நமஸ்சித்தம்" என்றனராம். இதனுடன்கூடிய மற்றஉயிர் மெய் ஆயுதவெழுத்துக்களையும் முறையே கற்பிக்கக் *கற்றுக் கொண்டனர்.

(8) தனுர்வித்தையாரம்பம்.

பிறந்த ஏழாம்வயதில் தனது வம்ச மூதாதையான †துரோணரின் தொழிலுக்குரிய வில்வித்தைகளை பழகினர்.

(9) ‡உபநயனம்.

கருதரித்த பதினொன்றாம் ஆண்டில், மாதாவின் கருப்பத்தில் கருத்தரித்தபோது முன்ஜன்ம தோஷங்களுந் தொடர்ச்சிப் பெற்றிருப்பதால் அக்கருமங்களை காளுக்குநாள் நித்தியானுஷ்டானங்களால் கழித்துக் கொள்ளும்பொருட்டாக "காரணகுருவினிடம்" பிரம்மோபதேசம்பெற்று பிரம்மதேஜசை அடையக்கூடிய ஞானஜன்மமாகிய புனர்ஜன்மத்திற்கு அடையாளமாகவும், த்விஜன் என்பதற்கு அடையாளமாகவும், பிரம்மசாரி விரதமேற்றவனென்பதற்கு அடையாளமாகவும், பூணூலைத்தரித்து வைத்தனர்கள்.

(10) உபாகருமம்.

உபநயனம்பெற்ற நாள் முதல்கொண்டு பிரதிவருடந்தோறும் வருகிறதக்ஷிணாயனத்தில் தங்களது இருக்வேதசாகை ஆஸ்வலாயன விதிப்படி சதுர்த்தி திதேசவும் திருவோணநட்சத்திரமுங்கூடிய திங்களுள்ள வாரத்தில் த்விஜர்களுக்குரிய சந்தோஷகரமான உபாகருமத் திருவிழாவையுஞ் செய்துவருகின்றனர்.

---

*வித்தையில் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பனல்ல காளமேகப் புலவனல்ல காளிதாசவன்பனல்ல ஆனால் ஹரிக்கு முன்னெழுத்தைத் தெரிந்தவன் ளோன். † இவரின் வம்ச பரம்பரையைத் தெரிந்துகொள்ள விருப்பமுடையவர்கள் வருணதருப்பணம் ஏழாவது அத்தியாயம் 269-வது பக்கத்தில் காண்க. ‡ஞானக்கண்.

## (11) வேதாரம்பம்

தங்களுக்குரிய வேதத்தின் கருத்துக்களேயும் மற்றவேதசாஸ்திரபுராண இதிகாசங்களேயும், தன்ருலியன்றளவு இன்னும் கற்றுக்கொண்டே வருகின்றனர்.

## (12) பற்பல தொழில்களிற் பிரவேசித்தது.

இவர் தனது அம்மானவர்களின் மூலமாய் சாராயம் கள்ளு விற்பனே செய்துவருபவர்களே மேல்தணிக்கைசெய்ய ஆரம்பித்தனர். இவ்விதமாய் சிலநாள் கழிந்துவருகையில் தமதுள்ளத்திலுதித்தது யாதெனில்:—ஸ்ரீராமாயண கீர்த்தனையில் கிஷ்கிந்தைக்காசனுகிய சுக்ரீவன் மதுவைப்பற்றி நிந்திக்கின்றகாலத்தில் ஹே! மதுவே? உன்னேக்குடித்தவன் கூலிக்கெடுத்தவன் அருகிலடுத்தவனுங் கெடுவான் என்று சொல்லப்பட்டிருக்க தானதைத் தெரிந்தும் பெரியோர்கள் பழிக்கும்படியான இத்தொழிலிற் பிரவேசித்தது தகாதெனவொழித்து விட்டனர்.

இதன் பின்னுல் பற்பல வர்த்தகங்களிலும் கண்ட்ராக்ட்டுகளிலும் பிரவேசித்து நடத்திவந்ததில் சகாயக்குறைவினுல் பொருள்நஷ்டமடையப்பெற்று இத்தொழிலேயும் விட்டுவிட்டனர்.

மற்றுஞ்சிலநாள் கழிந்தபின்னர் முதலாசிரியராக கொண்டக்காரனூர் கோவிந்தக்கண்டனூர் முதலிய விடங்களிலமர்ந்து "பள்ளிக்கூடங்களே" நியமித்து பாலர்களுக்குப் பகலிலும் வாலிபர்களுக்கு இரவிலும் அக்ஷராப்பியாசஞ்செய்துவைத்து "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என்று போதித்துக் கொண்டிருந்து "ஆக்கிராமம் குலநாஸ்தி" யெனவெண்ணி வேருருவரை இப்பாடசாலேக்கு நியமித்து விட்டனர்.

இப்படியுமப்படியுஞ் சிலநாள் கழிந்தபின்னர் தமக்குளுதித்த வெண்ணத்தால் நமதுஇந்தியா சக்கரவர்த்தினி அவர்களின் ஆளுகையில் ஒரு "காவலனுக" அமர்ந்து அதற்குரிய இராஜசின்னங்களே வகித்து சாம பேத தான தண்டங்களே அறிந்து நடக்கக்கூடிய சட்டதிட்டங்களில் தேற்சியடைந்து நியமித்தவிடங்களில் காவல்செய்து வருங்காலத்தில் இவருடைய கல்வியின் நுண்ணறிவிற்கும் நாகரீகத்திற்கும் வல்லமைக்கும் மேலதிகாரிகள் மகிழ்ந்து உயர்த்தப்பட்டு வருகையில் "நாட்டறம்பள்ளி" நகற்கு சர்வாதிகாரியும் பெரியமிராசுபாத்தியமுள்ளவரும் கௌரவமரியாதையுள்ளவரும் ஜில்லா, தாலூக்கா, போர்ட்டுமெம்பருமாகிய ஸ்ரீமான் இராமசுவாமிகண்டரவர்கள் இவ்வரைச்சந்தித்து உமது பரம்பரை தொழிலே விட்டுவிட்டு எங்கள் கௌரவத்திற்கே குறைவான இத்தொழிலிற் நீங்கள் பிரவேசித்திருத்தலே யோசித்து பார்க்கில் என்போன்றவர்களே அவமரியாதைசெய்து வைப்பதற்காக அமர்ந்திருப்பதாக எமக்குத்



சென்னை-600 008. 223567

பா. இல்லவே யில்லே.

கே. இதினுல் சிரேஷ்டமின்னது கனிஷ்டமின்னதென்று தெரிந்துகொள்ளுங்க ளென்றவுடன் சபை கலேயப்பட்டது. ஆயினும், அன்று விடியளவும் நாயகர் நித்திரையும், ஆகாரமுமின்றி ஷை இடத்தில் தங்கியிருந்து மருநாள்காலேயில் புரப்பட்டு பண்ருட்டிமார்க்கமாய் பாலூர், செல்விகுப்பம் தேவனும்பட்டணம், தேங்காதிட்டு, முதலியார்பேட்டை முதலியவிடங்களில் சஞ்சரித்ததில் புதுவையைச்சார்ந்த ஷை பேட்டை, யிலுள்ள செல்லுமண்டி த. அப்பாவு படையாட்சி அவர்களின் இரேகசகாயத்தினுலும், வன்னியகுல சேகரர் குமாரர் ஜோதிஷம் சதாநந்த ராயர் விகிதமுயர்ச்சியினுலும், அவ்வூர் இராமசாமி படையாட்சி அவர்கள் மாடியின்பேரில் குலாபிமானசபையொன்று கூடிற்று. அச்சபையிலுள்ளவர்களின் வேண்டுகோளுக்கிணங்கினவராய் தமக்குதெரிந்தவரையில் வன்னியின்பெருமையும், அவ்வழிவந்த மன்னர்களின் பிரதாபங்களேயும், பூர்வீக ஆசாரங்களும் தற்கால அநாசாரங்களும், விளக்கிகாட்டி இனி சர்வத்திராளும் நடந்து கொள்ளவேண்டியவிதிகளேயும் பசுமரத்தாணிபோல் சர்வத்திராளின் மனதிலும் பதியும்படி பிரசங்கித்து அன்னோர்களால் சமர்ப்பித்த பாதகாணிக்கை கப்பங்களே பெற்றுக்கொண்டு தக்ஷண திசையை நோக்கி விருதாசலந் தாலூக்கா, திருச்சிராப்பள்ளி ஜில்லா பெரம்பலூர் தாலூக்கா, உடையார் பாளயம்தாலூக்கா, ஜெயங்கொண்டசோழவரம் போஸ்டுக்கடுத்த அநேக கிராமங்களிலுள்ள வன்னியர்களில் குணபிமானம், குருபக்தி, தெய்வபக்தி, நிறைந்துள்ள சற்சீடர்களுக்கெல்லாம் புனருபநயனஞ் செய்து வைத்து அவர்களுக்குகர்தமட்டில் ஆசாரங்களே போதித்து அவர்களால் சமர்ப்பித்த பாத காணிக்கை கப்பங்களே பெற்றுக்கொண்டு பஷ்ம திசையை நோக்கிச் செல்லுகையில் கன்னடதேசமாகிய பெங்களூரில் தங்கியிருந்த 81-வது பைனீர் பட்டாளத்திலுள்ள வன்னியர்களுக்கும், அன்னிய சாதிகளாகிய கவரை, கம்மவான், வேட்டக்காரர், காவர்காரர் கள்ளர், மறவர், அகமுடையார், வெள்ளாளர் முதலியவர்களுக்கும் நடந்த கலகத்தினுல் ஷை பட்டாளம் 4-வது கம்பெனி அவுல்தார் பெரியசாமி கவுண்டரும், நாய்க் கிருஷ்ணசாமி நாயகரும் லான்ஸ் நாய்க் மதுரமுத்து படையாட்சியும் எழுதியனுப்பிக்கொண்ட ரிஜிஸ்டர் கடிதத்தின்பேரில் அவ்விடஞ்சென்று கர்னல் உத்திரவு இல்லாததினுல் சிப்பாய்களின் கும்பலில் தானுமொரு சிப்பாயாக வுள்நுழைந்து ஒருவாரம் வெளியில் வாரமலும், ஸ்நான மில்லாமலுமிருந்து ஷை கர்னல் உத்திரவு கிடைக்கப்பெற்று அப்பட்டாளத்தின் இந்து ஆபீசர்கள், (வீரர்கள்) நிறைந்துள்ள பெருங்கூட்டத்தில் இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு சாதிகளின் உற்பத்தியும், தொழிலும், தற்காலஉயர்வும், நடை, உடைகளும், அதினுல் கிடைத்திருக்கும் கௌரவபட்டமும், செல்வமும், அழகும், பெரியோர்

சிறியோர் என்னு மதிப்பில்லாமைக்குறிய *காரணங்களையும் எடுத்துக்காட்டியதினால் கன்னடியில் தங்களது பிரதி ரூபங்களைமாத்திரம் தாங்கள் தெரிந்துசொல்வதுபோல் தங்கள் தங்களது ஜாதியுற்பத்தியும் அவரவர்களுக்குரிய தொழிலும் தாங்கள் நடக்கவேண்டிய கிரமங்களும் தெரிந்துகொள்ளச் செய்துவிட்டு அங்குள்ள வன்னிய குலாபிமானிகளால் குருபக்தியின்பேரில் சமர்ப்பித்த பாதகாணிக்கை கப்பங்களைபெற்றுக்கொண்டு உத்திர திசையை நோக்கி வந்தனர்.

இவ்விடத்தில் வாலாஜாநகர் மேற்குத்தெரு நாட்டாண்மை ஆறுமுகநாயகரை ஷை தாலூக்கா போலீஸ் இனிஸ்பெக்டர் அவர்கள் நமது வம்சத்தைப்பற்றி கவர்ன்மெண்டார் அச்சுபாரத்தில் கேட்டிருக்கும் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டுமென கேட்டதற்கு, ஷை நாட்டாண்மை தன்னால்முடியாத காரணமிதுவென்றும், இதற்கு பதில்சொல்லக் கூடியவர்களை தான் அழைத்துவருவதாகவும் உத்திரவு பெற்றுக்கொண்டு காவேரிப்பாக்கஞ்சென்று, விசாரித்ததில் சக்கரவர்த்தி ராஜாமூலமாய் இவரிருந்தவிடத்தைத் தெரிந்துகொண்டு அவ்விடஞ்சென்று மேற்குறித்த விஷயங்களை சொன்னவுடன் அங்குள்ள சிஷ்ய கூட்டங்களுடன் ஷை இனிஸ்பெக்டர் சமுகம்சென்று அவரால் மதிக்கப்பட்டு கொடுத்தருளிய ஆசனத்தின் பேரில்வீற்றிருந்து காலை 9-மணிமுதல் 2-மணிவரையில் நடந்த 24-கேழ்விகளுக்கும் திருப்திகரமான விடையளித்துவிட்டு ஷை உத்தியோகஸ்தரின் சம்மதிபெற்று ஷை நாட்டாண்மையால் சமர்ப்பித்த பாதகாணிக்கை கப்பங்களை பெற்றுக்கொண்டு திரும்பினர்.

மேற்குறித்திருக்கும் தாலூக்காவிலும், சித்தூர் தாலூக்காவிலும் இராயவேலூர் தாலூக்காவிலும், குடியேத்தம் தாலூக்காவிலும், பள்ளிப்பட்டு தாலூக்காவிலும், திருவண்ணாமலை தாலூக்காவிலும், திருத்தணி தாலூக்காவிலும், போளூர் தாலூக்காவிலும், ஆற்காடு தாலூக்காவிலும், நாராயணவனம் தாலூக்காவிலுமுள்ள கிராமங்களிலிருக்கும் அநேக வன்னியர்களில் குலாபிமானமும் குருபக்தியும் நிறைந்தவர்களுக்கு புனருபநயனம், உபநயனமுஞ் செய்துவைத்து தக்கஆசாரங்களை போதித்து அவர்களால் சமர்ப்பித்த பாதகாணிக்கை கப்பங்களை பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

அன்றி சென்றகாலங்களில் நமது இராஜவம்சத்தவர்கள் எவ்விதமாய் சுயம்வரம் நாட்டி, திருமுகமனுப்பி, திருமணமாலை சூட்டி, விவாகங்கள்

*பொன்னொடு மணியுண்டானாற் புலையனுங் கிளைஞனென்று
தன்னையும் புகழ்ந்துகொண்டு ஜாதியின் மணமுஞ்செய்வார்
மன்னரா யிருந்தபேர்கள் வகைகெட்டுப் போவாராயின்
பின்னையு மாரோவென்று பேசுவாரேசுவரே. (விவேகசிந்தாமணி.)



# திக்குவிஜயம்.

சேனாங்கள் ஞானபுத்திரர்கள்! மகாவிசேஷம் அந்தியூர் பிரம்ம வன்னிவம்ச க்ஷத்திரிய மஹாமடாலய இரத்தினசிம்மாசனாதிபதி சக்கரவர்த்தி சிவராஜயோகி ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகராதீன பரம்பரை சேனாதிபதி அவர்கள் மகுடாபிஷேகம்பெற்றவுடன் பூவலம் வரவேண்டியது அவசியமாகையால் ஷை மடாலயத்திற்கு பூர்வதிசையிலுள்ள சேலம்நகரில் முன்வரும் காரியார்த்தமாக சிலநாள் தங்கி வெளிப்படுத்தியது யாதெனில்:—

## ஸ்ரீசேரமான் பெருமாணாயனார்
## (1) திருநட்சத்திர மஹோத்ஸவப் பத்திரிகை.

பூங்கணை மதவேள் வெந்துநீறுகப் பொடித்தவ னுதல்விழி யுருவா
யோங்கழற் குலத்திலுதித் துலகுயிர்களுரைப்பதையுணர்வுறுங் கருத்தால்
தேங்குசீர் கழறிற்றறிபவரென்று சிறந்திடுஞ் சேரர்கோ னிணைத்தா
ளிங்கெம திடும்பை யகலுமா றிரவும் பகலு நன்கிறைஞ்சி வாழ்த்திடுவோம்.

“உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரசாந்தம்” என்று வேதங்கள் துதிக்கும் சிவபெருமானது “ஸோம ஸூர்யாக்நி” நயனங்களில் பிரதானமாகிய நடுநாட்டத்துருவமாகிய அக்னியை மூலமாகக்கொண்டு பிரசித்தியடைந்த வன்னி குலத்திலவதரித்தருளிய பெருந்திருவாளரும், ஸ்ரீ பரசிவாநுக்ரஹத்தால் ஸர்வான்மாக்களது ஹ்ருதயங்களை யறிந்து நீதிகெடாமல் அரசுபுரிந்த காரணத்தினால் “கழறிற்றறிவார்” என்று திருநாமம் வகித்த ஸர்வஜ்ஞப்பிரபுவும், சோழபாண்டியர்கள் இறைகொணர்ந்திறைஞ்ச அருள்புரிந்து ஏகசக்ராதிபதியாய் உலகமுழுதுஞ் செங்கோலோச்சிய தலைமையாளரும், ஸ்ரீ தம்பிரான் றோழராகிய சுந்திரமூர்த்தியைத் தமது தோழராகக்கொண்டமகிமையாளரும் திருவாலவாயுடையார் விடுத்தருளிய திருமுகப்பாசுரத்தைப் பெற்று ஸ்ரீ பாணபத்திரருக்கும் பெரும்பொருள் கொடுத்த நிதிக்கோமானாரும், ஸ்ரீ சிவப்பாஞ்சடர் மகிழுமாறு பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, ஆதியுலா முதலிய பிரபந்தங்கள் செய்து வெண்பரிமீதிவர்ந்துசென்று ஸ்ரீ மஹா கைலாயத்தில் திருவுலாப்பிரபந்தத்தை அரங்கேற்றி அண்ணலாருளைப்பெற்று, ஆங்குள்ள சிவகணங்கட்குத் தலைவராயெழுந்தருளிய தனிமுதல்வரும், தம்மால் செய்தருளிய மேற்படி பிரபந்தங்களை உலகத்தில் விளங்கச் செய்யும்படியாய் திருப்பிடவூர் சாத்தனா

ரிடத்தில் கொடுத்தருளிய குணவந்தரும், தமது மூதாதையுமாகிய ஸ்ரீசேரமான் பெருமாணாயனார் திருநட்சத்திர மஹோற்ஸவத்தைக்கொண்டாடவும், உற்சவத் திருவுருவம் வார்ப்பிக்கவும், வெள்ளைக்குதிரை வாகனஞ்செய்துவைக்கவும், நங்குலாபிமானிகள் முன்வந்திராமையால் தான் தனது ஆயுளுள்ள வரையில் பிரதி ஒவ்வொருவருடமும் தவராமல் மனப்பூர்வமாய் நடத்தி வருவதாகவும் பிரதிக்ஞை செய்துகொண்டு அன்னியமல்லாத வன்னிய பூபதிகள் சகாயத்தின்பேரில் அடுத்த சௌமியஷு ஆடிமீ 10வ ஆதிவாரம் சுவாதி நட்சத்திரத்தன்று சேலம்ஸ்ரீசுகவனேசர் ஆலயத்தில் ஷை பூஜையை நடத்தப்படுமாகையால் ஷை தினம் பக்திமான்கள் சர்வத்திராளும் வந்திருந்து ஷை மஹோற்சவத்தை சிறப்பாகநடத்திவைத்து ஷை சுவாமிகளது திவ்வியானுக்ரஹத்துக்குப் பாத்திரராகி இன்புறுமாறு பிரார்த்தித்துத் திருவருளைச் சிந்திக்கின்றதாக.

இப்படிக்கு,

(ஒப்பம்) சே. மு. மாணிக்கவாசக நாயகவர்மா,

| | |
|---|---|
| முகாம், சேலம். கிலகஷு கார்த்திகைமீ 22வ விக்ரமாதித்யசகம் 1966. | சேனாதிபதி க்ஷத்ரியர்களின் மகா மடாலயம், அந்தியூர். |

# (2) நோட்டீஸ்.

இத்தென்னிந்தியாவில் ஏராளமான ஜனத்தொகையுடையவர்களாய் காலவித்தியாசத்தால் பயிரிடுதல் முதலிய பலகேவலதொழிலையுடையவர்களாயிருக்கும் வன்னிய ஜாதியார்கள் ஆதிகால்வருணத்தில் அக்ரவர்ணத்திற்கடுத்த க்ஷத்ரியஜாதியார்களென்றே நிரூபிக்கத்தக்க சரித்திரங்களும் யுக்தியநுபவங்களும் ஏராளமாய் மலிந்து கிடக்கின்றன. அப்படிக்கிருக்க சென்றமீ 15-10-09-ல் ஷை குலத்திலுற்பவித்த * ஒருவர் சேலம் சேர்ந்த செவ்வாய்ப்பேட்டை கெண்டக்காரத்தெருவில் தமது குலத்திலுற்பவித்த சைவமணியாகிய ஸ்ரீ சேரமான் பெருமாணாயனார் அவர்களின் சரித்திரத்தைக் கீர்த்தனரூபமாகப்பாடி கதாப்பிரசங்கஞ் செய்வதற்கியற்றிய விளம்பரத்தைப்பார்த்து சில் துராபிமானிகள் வன்னியர்கள் க்ஷத்திரியர்தாளல்லரென்றும், ஷை நாயனாருடன் இவர்களுக்கெவ்வித சம்பந்தமு

* சேலம் சுதேசாபிமானி பிரஸ் மானேஜர் சு. அர்த்தநாரீச நாயகரவர்கள்.



மில்லையென்றும் வெளியில் பல விடங்களில் *பிதற்றித்திரிவதாகத் தெரிந்து அப்படி மூட்டாள்த்தனமாய் பிதற்றித்திரிவதைவிட சாஸ்திரச்சரித்திர ஆராய்ச்சியுள்ள அறிஞர்கள் பலர்முன்னிலையிலாவது நியாயசபை மூலமாயாவது தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடுவார்களானால் அவர்களுக்குத் தக்கச்சந்தேக நிவர்த்தி தான் உண்டுபண்ணுவதற்கு காத்திருக்கின்றேன், என்று இந்நோட்டீஸ் வெளிப்படுத்தியிருக்கிறது. ஆனால் முக்கியமாய் குறைகூறுகின்றவர்களுக்கும்; இவ்விஷயங்களையறியாதவர்களுக்கும் தெரியப்படுத்தலாச்சுது. ஷை விஷயத்தைப்பற்றிச் சாதிக்க விருப்பமுடையவர்கள் சபைகூடுமிடம் நாள்முதலியது கண்டு தமக்கு ஒரு நோட்டீஸ் விடும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு.

(ஒப்பம்) சே. மு. மாணிக்கவாசக நாயகவர்மா,

| | |
|---|---|
| ஹெட்டாபீஸ் அந்தியூர் 16-11-09 | சேனாதிபதி. க்ஷத்ரியர்களின் மகா மடாலய பிராஞ்சாபீஸ், சேலம் |

* சேலம் கிச்சிப்பாளையம் குலாலவம்சம் குப்பண்ண செட்டியாரவர்களுக்கும், மேலே ஒப்பமிட்டிருப்பவருக்கும் ஷைடவுன் போலீசு ஸ்டேஷனண்டையிலிருக்கும் பைண்டர் ப. முருகப்பச்செட்டியார் கடையில் நடந்தசம்பாஷணை வருமாறு யாதெனில் —

கு. மானேஜரவர்களின் தந்தை பெயரென்ன.

மா. சுகவன படையாட்சி.

கு. மானேஜரின் முன்பெயரென்ன.

மா. அர்த்தநாரி பிள்ளை.

கு. தற்கால பெயரென்ன.

மா. அர்த்தநாரீச நாயகர்.

கு. ஷையாருக்கு புனர்விவாகம் நடந்தவரையில் பூணூல் கிடையாதே இப்போது எங்கிருந்து வந்து மாட்டிக்கொண்டது.

மா. உலகத்தில். ஒவ்வொருமானிடர்களும், ஞானமுதித்தமேல்தான் ஆசாரங்களை அநுஷ்டித்து வருகிறார்கள்.

கு. வாஸ்தவந்தான். ஆனால், தகப்பன் படையாட்சி என்றும், தனயன் பிள்ளை என்றும், ஈசநாயகர் என்றும், பட்டம் வைத்து வழங்கி வருவதுபோல் வேறெந்த குலத்திலுண்டா?

மா. உள்ளதுள்ளபடியுரைத்தீர். ஆனால் தந்தைக்கும், தனயனுக்கும் பட்டம் மாறுபட்டிருப்பினும், கருத்து ஒன்றேயென்றுமாத்திரம் அறியாது பேசினீர் ஆயினும் அதினால் தோஷமில்லை. உங்கள் பட்டத்தை சற்று யோசிக்குமளவில தாதைகுயவனென்றும், தந்தை மண்ணுடையானென்றும், பௌத்திரராகிய நீர் செட்டியென்றும் வகித்து வழங்கி வருதல் சரியோ சொல்வீர். என்றவுடன் வெட்கித் தலைகுனிந்து சென்றவர் பின்வரும் நபரைத் தூண்டிவிட்டனர்.

## (3) தேவாங்கதாப விளம்பரம்.

சிவபக்தர்களாகிய நமது சகோதரர்களே! நம்மவருக்கும் உலகத்துள்ள பல்வருணத்தாருக்கும் சவிஸ்தாரமாயும் நீண்டவனுபவமாயும் தெரிந்துள்ள இறந்த நிகழ் வருங்காலங்களின் ஒருபோது கனவிலுங்கூட க்ஷத்ரியரே யல்லாத சூத்திர ஜாதியாரில் மிக கீழல்லாத பள்ளியர் வன்னியர் என்கிற கவுண்டர் குலத்திற் பிறந்த சில துள்ளுபோக்கிலிகள், திருத்தொண்டர் தொகை அறுபத்து மூவருள் மேலாய ஸ்வரூப ரூபத்தியடைந்த நம்மவர்கள் சதா கொண்டாடிவரும் சாக்ஷாத் சேரமான் பெருமாளுயனார் ஸ்வாமிகளை பள்ளியர் குலமென்கிற வன்னிமன்னனென்று பிரசுரித்து பாஷித்து மததூஷணையும், மதத்திற்கீனத்தையும் நம்மவருக்கு அவமானத்தையும் ஆத்திறத்தையும் உண்டுபண்ணியிருக்கிறார்கள், இத்தகைய மனிதர்களை பிரதமத்திலேயே நாமெல்லோரும் சாஸ்திரானுபவங்களால் கண்டிக்கவும் கவர்ன்மெண்டாரால் தண்டிக்கவும் வேண்டியதற்கு கடமைப்பட்டவர்களாய் நாமிருப்பதால் தாங்களும் தங்களுக்குத் தெரிந்த தேவமத, அநுதாப பக்தர்களுடன் சேலம் தேர்முட்டி மண்டபத்தில் 1909ளு நவம்பர்மீ 21உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு நடக்கும் பிரசங்கத்திற்கு விஜயம் செய்ய தாங்கள் எல்லோரையும் மிக்க வந்தனங்களுடன் பிரார்த்திக்கிறேன்.

(ஒப்பம்) ஸ்ரீ யஸ். குப்புசாமி பிள்ளை,

19-11-09. வாணசாஸ்திரி,

சேலம்.

---

## (4) குப்புசாமி பிள்ளையின் தப்புவிளம்பர கண்டனம்.

இந்து மதஸ்தர்களனைவர்களுக்கும் இதன்வாயிலாய் நான் தெரிவித்துக்கொண்டது யாதெனில்:—

சென்ற 16-11-09-ல் தன்னால் வெளிப்படுத்தியிருக்கும் நோட்டீசை சர்வத்திரானும்பார்வையிட்டிருக்கக்கூடும். அதில் காட்டியிருக்கும்வண்ணம் நடந்துக்கொள்வது சாஸ்திர ஆராய்ச்சியுள்ள அறிவுடையோரின் கடமையாகும். அன்றி, "பிறன்பழிகூறுவான் தான்பழியுள்ளுந் திறந்தெரிந்து கூறப்படும்" என்பதைக் கைவிட்டு ஷை பிள்ளை தன்மனம்போல் நடத்தல் தகுதியல்லவென்று இதன்வாயிலாய் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார்.

# இதனடியிற் கையொப்பமிட்டிருக்கும் சுவாமிகள் மூலமாய் கிடைக்கக்கூடிய புஸ்தகங்களின்

# ஜாபிதா.

---

1. அரசர்களின் மஹாமடாலய சட்டதிட்டங்கள்.
2. அரசர்களின் மஹாமடாலய மடாதிபதி தெரிசனப்பா.
3. அரசர்களின் மஹாமடாலயமுன்சேனாதிபதிஜீவகாலசரிதை.
4. அரசர்களின் மஹாமடாலய சேனாதிபதி திக்குவிஜயம்.
5. அரசர்களின் குலத்திரட்டு.
6. அரசர்களின் சோடச கிரியாசங்கிரஹம்.
7. அரசர்களின் ஊஞ்சற்பாமாலை.
8. அரசர்களின் தாலாட்டு.
9. அரசர்களின் *நித்தியகன்மச் சுருக்கம்.
10. அரசர்களின் 32-விருதுகளைக்கூறும் திருமுகம்.
11. அரசர்களில் போர்வீரராகிய ஜெயராம நாயகர் ஜீவகால
12. அரசர்களில் பள்ளிப்பதமுயர்வு †தாழ்வு. [சரிதை.
13. அரசர்களில் குருபத்தி தருமுத்தி
14. அரசர்களுடைய குலகுரு ஸ்ரீமத் குழந்தையானந்த சுவாமிகளின் 9-வது வருட பூஜையின் வாழ்த்துப்பாமாலை.

பழய சித்தேரி,<br>இராயவேலூர்.<br>16-8-1912.

இப்படிக்கு,<br>ஸ்ரீமத் சே. மு. மாணிக்கவாசகசுவாமிகள்<br>அக்கிரசன்மன்,<br>ஸ்ரீசோர்கோன் மடாலயம்.

---

* இப்புஸ்தகத்தை தபால்சார்ஜ் அன்றி விலை 1-4-0-ம் கொடுத்து வாங்கக்கூடியவர்களுக்கு மேற்காட்டிய புஸ்தகங்களெல்லாம் இனாமாக அனுப்பப்படும். ஆனால் 1, 5, 10-நெ-ல் கண்ட புஸ்தகங்கள் செலவாய் விட்டது.

† க்ஷத்ரஸ்துதியாகும்.